## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. பொற்கலை | அசல் வழக்கு எண். | 86/2009 |
| த/பெ. | - | சுப்ரமணியன் | வா.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

18.09.2025.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. என் அம்மா அமிர்தம் மற்றும் என்னுடைய தம்பி 1ம் பிரதிவாதியான ஆறுமுகம் உயிருடன் இல்லை என்றால் சரிதான். என் அம்மாவும் என் தம்பியும் உயிருடன் இருந்தபோது தான் இவ்வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கு என்னுடைய வருகையின்மை காரணமாக இரண்டு முறை தள்ளுபடி(DFD) செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அம்மாவும் என் தம்பியும் இறந்த பின்பு தான் நான் அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுப்பதற்கு மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் வருவாய் ஆவணங்களான பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் ஆகியவைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் பாக பிரிவினை ஏற்படுவதற்கு முன்பு என் தம்பி ஆறுமுகம் தான் உரிமையில் இருந்து வந்தார் என்றால் என் தம்பி மற்றும் என் அம்மா அனுபவித்து வந்தார்கள். பாக பிரிவினையில் எனக்கு தனியாக சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு பாக பிரிவினையில் சொத்து ஒதுக்கியிருந்தாலும் என் அம்மாவும் என் தம்பியும் தான் அனுபவம் செய்து வந்தனர் என்றால் சரியல்ல, எனக்கு கொடுத்த சொத்தை நான் அனுபவித்து வந்தேன். எனக்கு ஒதுக்கிய சொத்தை என் தம்பி எனது உடமைக்கு கொடுக்காததால் தான் நான் என் தம்பியிடம் சண்டை செய்தேன் என்றால் சரியல்ல, பாக பிரிவினை சொத்தை பொறுத்து எந்த சண்டையும் இல்லை , எனக்கு கொடுத்த சொத்து போதாது என்பதால் என் அம்மா எனக்கு கூடுதலாக மறுபடியும் கொடுத்த சொத்தை பொறுத்து தான் சண்டை ஏற்பட்டது. தாவா சொத்தில் நான் வீடு கட்டி குடியிருந்து வரவில்லை என்றால் சரியல்ல, என் தங்கையான 2ம் வாதி வீடு கட்டி

குடியிருந்து வந்தார் அதனை பிரதிவாதி பிரித்து எறிந்துவிட்டார். 2ம் வாதியின் வீட்டை பிரதிவாதி பிரித்து எறிந்தது சம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது சம்மந்தமாக என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றும் ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக புகார் கொடுத்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து விவரத்தில் வீடு இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றும் அவர் காலமான பின்பு அவரது வாரிசுகளான 2 முதல் 5 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் 2ம் வாதியின் வீட்டை பிரித்து கொளுத்திவிட்டு அதன் பின்பு 1ம் வாதி வீடு கட்டினார். தாவா சொத்தில் உள்ள முந்திரி மரங்களை என் தம்பி தான் வைத்தார் என்றால் சரியல்ல, நான், என் அம்மா என் தம்பி என் தங்கை என எல்லோரும் மரம் வைத்தோம். தாவா சொத்திற்கு எனது பெயரில் வரி செலுத்தவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதிகள் தான் குடியிருந்து வருகின்றனர் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான வீட்டு வரி இரசீது, மின்கட்டண இரசீது, வருவாய் ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதிகள் பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறந்த பின்பு எனது தம்பியான 1ம் பிரதிவாதி விவசாயம் தான் செய்து வந்தார் என்றால் விவசாயம் மற்றும் ஊதுவர்த்தி கம்பெனி நடத்தி வந்தார். 1ம் பிரதிவாதி தனியாக ஊதுவர்த்தி கம்பெனி நடத்தி வருமானம் ஈட்டி வந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அவருக்கு எத்தனை வயது இருக்கும் போது ஊதுவர்த்தி கம்பெனி ஆரம்பித்தார் என்றால் 1ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆன பின்பு தான் ஊதுவர்த்தி கம்பெனி ஆரம்பித்தார். முந்திரி மரங்கள் உள்ள தாவா சொத்துக்களை எனது அம்மா தனிப்பட்ட முறையில் அனுபவித்து வரவில்லை என்றால் அனைவரும் ஒன்றாக தான் அனுபவித்து வந்தோம். தாவா சொத்துக்களை என் அம்மா எனக்கு விலையில்லாமல் தான் கொடுத்தார் என்றால் சரியல்ல, பணம் கொடுத்து தான் வாங்கினோம். எங்கு வைத்து எவ்வளவு ரூபாய் எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. என் அம்மா எனக்கு கிரையம் கொடுத்த விவரம் 1ம் பிரதிவாதி தெரியாது என்றால் சரியல்ல, 1ம் பிரதிவாதிக்கு தெரியும். நான் என் அம்மாவிடம் கிரையம் வாங்க போகும் விவரத்தை 1ம் பிரதிவாதியிடம் சொன்னேனா என்றால் 1ம் பிரதிவாதியிடம் சண்டை என்பதால் சொல்லவில்லை. எதனால் 1ம் பிரதிவாதியிடம் சண்டை ஏற்பட்டது என்றால்

நிலத்தின் காரணமாக சண்டை ஏற்பட்டது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 உள்ள ஆவணங்கள் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. என் அம்மா விருப்பப்பட்டு எந்த கிரைய பத்திரமும் எழுதி கொடுக்கவில்லை என்றும் நான் தான் மோசடியாக கிரையம் பத்திரத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.என் அம்மாவின் வாரிசுகள் அனைவருக்கும் சமமாக பங்கு உண்டு என்றும் அதன்படி தான் பிரிக்க வேண்டும் என்று சொல்லிவந்தார் என்றும் என் அம்மாவை ஏமாற்றி கிரைய ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கை தாக்கல் செய்த பின்பு தான் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களை பற்றி என் அம்மாவிற்கும் 1 ம் பிரதிவாதிக்கும் தெரிய வந்தது என்றால் சரியல்ல. அதனால் தான் என் அம்மாவும் என் தம்பியும் உயிருடன் இருந்த காலத்தில் அசல் வழக்கை நடத்த முன் வரவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் என் அம்மா வழக்கிற்கு அவசிய தரப்பினராக உள்ளபோதிலும் அவரை நான் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் தான் தற்போது வரை எவ்வித இடையூறுமின்றி அனுபவித்து வருகின்றனர் என்றால் சரியல்ல. எங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் கருத்து ஒற்றுமை ஏற்படாததால் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் நடைமுறையில் வரவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்துக்களில் எவ்வித அனுபவமும் இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

District Munsif
Vanur.